---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

களனி பல்கலைக்கழகத்துடன் இணைந்த தொல்பொருளியல் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 18 பிரிவின் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ள 1985 இன் 02 ஆம் இலக்க தொல்பொருளியல் பட்டப்பின் படிப்பு நிறுவக விதப்புரையின் 20 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழக சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
நிதிக்கூற்றுக்கள் நிறுவகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமா்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவனத்தின் நிர்வாக நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப் பிரமாணம் 105(2) | தொலைந்துபோன 808 புத்தகங்கள் மற்றும் 515 நாளிதழ்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இது தொடர்பாக விசாரணை தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | நிதிப் பிரமாணத்தின் ஏற்பாடுகளுக் கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதிப் பிரமாணம் 571 | உரிய பணி நிறைவு பெற்று 02 வருடங்களை விஞ்சியிருந்த கூட்டுப்பெறுமதி ரூபா 47,976 ஆன 06 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இது தொடர்பாக அந்த நிறுவனத்திற்கு 2023.03.31 ஆந் திகதி கடிதம் மூலம் அறிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் ஏற்பாடுகளுக் கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2022 சனவரி 03 ஆம் திகதிய இலக்கம் 2022/01 என்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை | வருடாந்தம் நூலகப் புத்தகங்கள் மெய்மையாய்வு மேற்கொள்ளப் படவேண்டிய போதிலும் 2019 ஆம் ஆண்டின் பின்னர் உரிய மெய்மை ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 2019 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட நூலகப் புத்தகங்களின் மெய்மையாய்வின் பிரகாரம் தொலைந்து போன புத்தகங்களின் பிரச்சினைகள் தொடர்பான விசாரணைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றமையால் அந்த பிரச்சினைகளைத் தீர்க்கப்படும் வரை நூலகப் புத்தகங்களின் மெய்மையாய்வை மேற்கொள்ளாதிருக்குமாறு 25 ஆவது நூலக ஆலோசனைக் குழுக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2015 நவம்பர் 17 ஆம் திகதிய இலக்கம் 15/2015 என்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை | பரீட்சை நடாத்தி 03 மாதங்களுக்குள் பெறுபேறுகள் வெளியிடப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட 03 பரீட்சைகளுக்குரிய 10 பாடங்களின் பெறுபேறுகளை வெளியிடல் 04 மாதம் முதல் 07 மாதங்கள் வரையான கால தாமதம் ஏற்பட்டிருந்தது. | 03 மாதங்களை விஞ்சுகின்ற விரிவுரையாளர்களுக்கு நிறுவனத்தின் பணிப்பாளரின் கையொப்பத்துடன் மீள் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டு பரீட்சை வினாப் பத்திரங்களை விரைவாகப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 3,181,409 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 5,471,750 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 8,653,159 இனால் வீழ்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு பரிமாற்றல் அல்லாத கொடுக்கல் வாங்கல்களின் அடிப்படையில் மீண்டெழும் மற்றும் மூலதன மானிய பெறுவனவுகள் ரூபா 12,552,523 இனால் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது 07 பட்டப்பின் பாடநெறிகளுக்காக 77 மாணவர்கள் பதிவு செய்திருந்ததுடன் கடந்த ஆண்டின் போது 05 பட்டப்பின் பாடநெறிகளுக்காக 82 மாணவர்கள் பதிவு செய்திருந்தனர். பட்டப்பின் பாடநெறியின் எண்ணிக்கை முன்னைய ஆண்டினை விட 02 அதிகரித்திருந்த போதிலும் பட்டப்பின் பாடநெறிக்காக பதிவு செய்யும் மாணவர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டுடினை விட 05 மாணவர்கள் குறைந்திருந்தனர். அவ்வாறே 10 மாணவர்களுக்கு மேல் பதிவு செய்திருந்த பட்டப்பின் பாடநெறிகளின் எண்ணிக்கை 04 ஆனமையால் நிறுவனம் நடாத்திச் செல்லப்படுகின்ற பட்டப்பின் பாடநெறிக்காக மாணவர்களை ஆட்சேர்ப்பது தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | 2022 கல்வி ஆண்டிற்காக கவனத்திற் கொள்ளக்கூடிய அளவில் விண்ணப்பங்கள் கிடைத்திருந்த போதிலும் நாட்டில் காணப்படுகின்ற பொருளாதார நெருக்கடிகளின் ஆரம்பத்தலுடன் பாடநெறிகளுக்காக மாணவர்களின் பதிவு குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | பட்டப்பின் பாடநெறிகளுக்காக மாணவர்களை கவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது பட்டம் அல்லாத பாடநெறிகள் எதற்கும் மாணவர்கள் பதிவு செய்யாதிருந்ததுடன் இறுதித் தடவையாக பட்டம் அல்லாத பாடநெறிக்காக 2020 ஆம் ஆண்டின் போதே மாணவர்கள் பதிவு செய்திருந்ததுடன் அந்த 06 பாடநெறிகளுக்கான மாணவர்களின் எண்ணிக்கை 220 ஆக இருந்தது. | முன்னர் காணப்பட்ட கொவிட் தொற்று நோய் நிலைமையினால் தாமதமடைந்திருந்தமை, அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய நான்கு பாடநெறிகளில் தற்போது கற்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் மிகுதி பாடநெறிகளுக்காகவும் பாடப் பரிந்துரைகள் கற்கைச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் எதிர்காலத்தில் விண்ணப்பங்களைக் கோருவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது. | பட்டம் அல்லாத பாடநெறிகளுக்காகவும் மாணவர்களை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பட்டப்பின் பாடநெறி விண்ணப்பதாரர்களில் ஆய்வறிக்கைகளை மதிப்பிடுதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் வரையுள்ள செயற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பின் போது பட்டப்பின் பாடநெறி விண்ணப்பதாரர்களினால் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த முதலாவது மற்றும் இரண்டாவது பரீட்சகர்களுக்கு கையளிப்பதற்காக 21 நாட்கள் முதல் 68 நாட்கள் வரையான கால இடைவெளி எடுக்கப்பட்டிருந்த 07 சந்தர்ப்பங்களும், பரீட்சகர்கள் விடைகளை பரீட்சிப்பதற்கு 60 நாட்களுக்கு மேல் எடுத்த 14 சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. அவ்வாறே பரீட்சகர்களினால் ஆய்வறிக்கைகளைப் பரீட்சித்ததன் பின்னர் வாய்மூல பரீட்சை நடாத்துவதற்கு 60 நாட்களுக்கு மேற்பட்ட காலம் எடுத்த 03 சந்தர்ப்பங்களும் காணப்பட்டது. | பட்ட ஆய்வறிக்கைகள் கையளிக்கப்பட்டதன் பின்னர் கற்கைகள் சபையினால் பரீட்சகர்களை நியமித்தல் மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறே சில சந்தர்ப்பங்களின் போது நியமிக்கப்படுகின்ற பரீட்சகர்கள் பட்ட ஆய்வறிக்கைகளை பரீட்சித்தல் நிராகரிக்கும் போது மீண்டும் பரீட்சகர்களை நியமிப்பதற்காக அடுத்துவரும் கல்வி கற்கை சபை அங்கீகாரத்தை பெறவேண்டியுள்ளது. அவ்வாறான நிலைமையில் தாமதங்கள் ஏற்படுவதற்கு காரணமாக இருந்தது. | பரீட்சகர்களினால் ஆய்வறிக்கைககளைப் பரீட்சிப்பதற்கு எடுக்கப்படுகின்ற காலத்தைக் குறைப்பதற்கும் வாய்மூல பரீட்சைகளை விரைவாக நடாத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |